# அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை

உயர்கல்விக்கு உதவும் கரங்கள்.

## சமுதாயத்தில் அடிமட்டத்தில் இருப்பவர்கள் உயர்வதற்கான ஒரே கருவி கல்வி

சமுதாயத்தில் அடிமட்டத்தில் இருப்பவர்கள் உயர்வதற்கான ஒரே கருவி கல்வி



அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்,
ஆலயம் பதினாயிரம் நாட்டல்,
பின்னருள்ள தருமங்கள் யாவும்,
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்,
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் என்றார் பாரதியார். ஏழை மாணவர்களின் வாழ்க்கைத் தரம் உயர உயர்கல்விக்கு உதவி செய்தால் அவர்களின் கல்வி மட்டுமல்லாமல் பொருளாதார வளர்ச்சியும், சமூகத்தின் வளர்ச்சியும் ஒருசேர உயரும்.

ஒரு காலத்தில் வட ஆர்க்காடு மாவட்டம் கல்வியிலும், பொருளாதாரத்திலும் பின்தங்கிய மாவட்டமாக இருந்தது. இப்பொழுது மாற ஆரம்பித்திருக்கிறது. இந்தியாவில் 797 மாவட்டங்களில் தமிழ்நாடு கல்வியில் பிற்படுத்தப்பட்ட பகுதியில் நாம் இருக்கிறோம். இந்த நிலை மாற வேண்டும் என்றால் தனியார் தொண்டு நிறுவனங்கள் ஏழை மாணவர்களின் உயர்கல்விக்கு உதவுவதோடு அரசாங்கத்தின் உதவியும் இருந்தால் உயர்கல்வி சேர்க்கை விகிதத்தில் (Gross Enrolment Ratio - GER) தமிழ்நாடு 100% எட்டும்.

வேலூர், திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்கள் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள சவ்வாது மலை ஒன்றியம் உயர்கல்வியில் முன்மாதிரி மாவட்டங்களாக விளங்க வேண்டுமென்பது என் விருப்பம். கல்விதான் வீட்டையும், நாட்டையும் உயர்த்தும். ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு உயர்கல்வி அளித்துவிட்டால், அவர் படித்து நல்ல வேலையில் அமர்ந்து தன்னுடைய சகோதர சகோதரிகளைப் படிக்க வைத்து, ஒவ்வொரு குடும்பமும் முன்னேறும்போது உயர்கல்வியும், வேலை வாய்ப்பும், மாவட்டத்தின் வளர்ச்சியும் ஒரு சேர உயரும் என்பது என் நம்பிக்கை. அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை சார்பில் இதுவரை (2012 - 2023 ஆம் ஆண்டு வரை) 7,449 மாணவ மாணவியருக்கு 8 கோடியே 33 லட்சம் ரூபாய் உயர்கல்வி உதவித்தொகையாகக் கொடுத்து இருக்கின்றது.

## திரு. இர்ஷாத் அஹமத் மெக்கா, அறக்கட்டளை உறுப்பினர்



கல்வியானது ஒரு மனிதனின் முக்கிய தேவையாக இருக்கிறது. கல்வி பெறுவது மனித அடிப்படை உரிமைகளில் ஒன்று. ஒருவனுக்குப் பெருமையையும் புகழையும் தரக்கூடிய செல்வம் கல்விச் செல்வமே அன்றி வேறில்லை. கல்வி என்பது வேலை வாய்ப்புப் பெறுவதற்கும், வளமான வாழ்க்கை வாழ்வதற்கும் உதவும் கருவியாகும். திறமைகள் இருந்தும், பொருளாதாரச் சூழல், குடும்பங்களின் நிலை ஆகியவற்றால் பல மாணவர்கள் உயர்கல்வி பெற இயலவில்லை. அத்தகைய மாணவர்களிடமிருந்து உயர்கல்வி விண்ணப்பங்களைப் பெற்று, அவர்களது உயர்கல்விக் கனவை நனவாக்க அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை நிகரற்ற தொண்டு செய்கிறது.

## திரு. கே.எம். ஜி. இராஜேந்திரன், அறக்கட்டளை உறுப்பினர்



உற்றுழி உதவியும்
உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது
கற்றல் நன்றே

புறநானூற்றுப் பாடல் - பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன். கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கு உதவிகளைச் செய்தாவது அவர்களுக்குப் பணம் மற்றும் பொருள் கொடுத்தாவது இறைவனிடம் தியானித்தாவது ஒவ்வொரு குடிமகனும் கல்வி கற்பது நன்மை தரவல்லது எனச் சங்க காலத்திலேயே மன்னன் பாண்டிய நெடுஞ்செழியன் மேற்காண் பாடல் வழியாகத் தம் மக்களுக்கு அறிவுறுத்தினார்.

தமிழ்ச் சமுதாயத்தில்மட்டும்தான் கல்வியின் மாண்புகளையும், பெருமைகளையும் அதன் பயன்களையும் பெருமளவில் பேசப்பட்டு வருகிறது.

நம்முடைய விஐடி வேந்தர் அவர்கள் இதன் தொடர்ச்சியாக நம் தமிழ்நாட்டு மாணவர்கள் அனைவரும் உயர்கல்வி பெற வேண்டும் என்கிற தன்னுடைய மாபெருங் கனவினை நிறைவேற்றும் பொருட்டு 2012 ஆம் வருடத்தில் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை என்கிற அமைப்பைத் தொடங்கி இதுவரை சுமார் ரூ. 8 கோடி வரையிலான கல்வி உதவித் தொகை தகுதியான உயர்கல்வி பெறுகின்ற மாணவர்களுக்கு வழங்கப்பட்டுச் சிறப்பான பணியினை ஆற்றி வருகிறார்.

இதில் 91% மாணவர்கள் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களைச் சார்ந்தவர்கள், மேலும் 68% மாணவர்கள் முதல் தலைமுறைப் பட்டதாரி வகையைச் சார்ந்தவர்கள் என்பது மிகவும் பெருமைபடக்கூடியதாகும். அறக்கட்டளை உறுப்பினர் என்ற வகையில் நாங்கள் வேந்தர் அவர்களின் மாபெருங் கனவினை முழுமையாக நிறைவேற்றிட உறுதுணையாய் உள்ளோம் என்பது எங்களுக்கு மகிழ்வே !

## "முயல்வோம் வெல்வோம்"







அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை, வேலூர் மற்றும் இராணிப்பேட்டை தமிழியக்கம்-சோளிங்கர் இணைந்து வழங்கிய "முயல்வோம் வெல்வோம்" 12 ஆம் வகுப்பு படிக்கும் அரசுப் பள்ளி மாணவியர்களுக்கான ஒருநாள் கருத்தரங்கு பிப்ரவரி 16, 2023 அன்று அரசு முன்மாதிரிப் பெண்கள் மேநிலைப்பள்ளி, சோளிங்கரில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 200 மாணவியர்கள் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியில் டாக்டர். வி. நெடுஞ்செழியன், முதல்வர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சோளிங்கர் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு "முயல்வோம் வெல்வோம்" என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். கவிஞர். எ. சங்கரன் தமிழ் இயக்கம், இராணிப்பேட்டை மாவட்டச் செயலாளர், சோளிங்கர் அவர்கள் மாணவியர்கள் அனைவரும் இடைநிற்றலன்றி உயர்கல்வியில் நன்றாகப் பயின்று கல்வி, பொருளாதாரம் மற்றும் சமூகத்திலும் உயர்ந்திட வேண்டும் என்று ஊக்கமளித்தார். இதில் திரு. எம். மணிவண்ணன், தலைமை ஆசிரியர், திரு. சி. பார்த்திபன், (PT Asst.) திரு. வி. முருகன், சங்கச் செயலாளர், திரு. ப. சுந்தர் ராஜ், திட்ட ஒருங்கிணைப்பாளர், அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை, வேலூர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## AWARENESS AND ORIENTATION PROGRAM ON THE IMPORTANCE AND ACCESS TO HIGHER EDUCATION

Resource Person : Dr. R.Sakthivel, Professor, School of Electronics Engr., VIT Vellore,
Mr. P.Sundar Raj, Project Co-ordinator, UHET, VIT Campus, Vellore
Participants : 12th Std. - 210 Students

### செயிண்ட் ஜோசப் மேல்நிலைப்பள்ளி, அத்திப்பட்டு, சவ்வாதுமலை









அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையின் மூலம் ஒரு நாள் விழிப்புணர்வு முகாம் சவ்வாதுமலைப் பகுதியில் உள்ள அத்திப்பட்டு செயின்ட் ஜோசப் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. மலைவாழ் பகுதி மாணவர்களின் கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றியும், உயர்கல்வியின் அவசியத்தைப் பற்றியும், படித்து வேலைக்குச் சென்றால் அதனால் ஏற்படக்கூடிய பொருளாதாரம் மற்றும் சமூக மாற்றத்தைக் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.


universalhighereducationtrust

## கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பங்கள் வழங்குதல்





அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையின் உயர்கல்வி உதவித்தொகை பெற வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மாவட்டங்கள் மற்றும் திருவண்ணாமலையில் உள்ள சவ்வாது மலை ஒன்றியத்திற்குட்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு மே 22, 2023 முதல் மே 30, 2023 வரை கல்வி உதவித் தொகை வழங்குவதற்கான விண்ணப்பங்கள் வழங்கப்பட்டன. உதவித்தொகை விண்ணப்பம் வழங்கும் தகவல்கள் மே 21, 2023 நாளிதழ்களில் வெளியிடப்பட்டன.





4 தினமணி வேலூர் ஞாயிற்றுக்கிழமை, 21 மே 2023

உயர்கல்வி உதவித்தொகை: பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்

அனைவருக்கும் உயர்கல்வி அறக்கட்டளை

## அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை உதவித்தொகை வழங்குதல்






2022 - 23 கல்வியாண்டிற்கான கல்வி உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி மார்ச் 29, 2023 அன்று வேலூர் விஐடி வளாகத்தில் உள்ள அண்ணா கலை அரங்கத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் விஐடி வேந்தரும் அறக்கட்டளைத் தலைவருமான கல்விக்கோ டாக்டர். கோ. விசுவநாதன் அவர்கள் தலைமை வகித்தார். நிகழ்வில் சிறப்பு விருந்தினராகப் பத்ம ஸ்ரீ. டாக்டர். நல்லி குப்புசாமி செட்டியார் கலந்துகொண்டு மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்கிச் சிறப்புரையாற்றினார். மற்றும் டாக்டர். பார்த்தசாரதி மாலிக், பேராசிரியர், உதவி துணை வேந்தர், விஐடி அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையின் செயலாளர், பொருளாளர் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொண்டனர். இந்நிகழ்ச்சியில் 655 மாணவர்களுக்கு ரூ 40,49,000/- (ரூபாய் நாற்பது லட்சத்து நாற்பத்தொன்பதாயிரம்) கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டன.






THE NEW INDIAN EXPRESS
03 VELLORE THURSDAY 30.03.2023

**670 students get UHET's education scholarship**

Vellore: About 670 students received education scholarships of ₹40.49 lakh for the academic year 2022-23 under the Universal Higher Education Trust (UHET), which provides scholarships to meritorious students from poor economic backgrounds. The event was held at Vellore Institute of Technology on Wednesday. VIT Chancellor G Viswanathan said that the UHET which was launched in 2012, has provided scholarships of ₹8.33 crores to 7449 students (2481 boys and 4968 girls) so far. Members of UHET, students and parents took part in the function. ENS




ஏழை மாணவர்களின் உயர்கல்வியை மேம்படுத்துகிறோம்

## CAREER GUIDANCE AND LIFE SKILL DEVELOPMENT

Resource Person : Dr. R. Sakthivel, Professor, School of Electronics Engr., VIT
Mr. P. Sundar Raj, Project Coordinator, UHET, VIT Campus
Participants : UG Final Year - 170 Students

### இஸ்லாமியா கல்லூரி, வாணியம்பாடி





அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை மற்றும் வாணியம்பாடியில் உள்ள இஸ்லாமியா கல்லூரி இணைந்து நடத்திய திறன் மேம்பாட்டு மற்றும் வேலை வாய்ப்பிற்கானப் பயிற்சிகள் மார்ச் 02, 2023 அன்று நடைபெற்றது. அக்கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்குத் தொழில் மற்றும் தொழில் சார்ந்தத் திறமையை வளர்த்துக்கொள்வது குறித்தும், ஆளுமை மற்றும் வாழ்வியல் திறன்களை மேம்படுத்துவது குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது. நிகழ்வில் கல்லூரி முதல்வரும் பேராசிரியர்களும் கலந்துகொண்டனர்.

### SHINE பகுதி VIII நிறைவு விழா மற்றும் SHINE பகுதி IX தொடக்க விழா

அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை, வேலூர் மற்றும் ஆஸ்பயர் சிஸ்டம்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், சென்னை இணைந்து நடத்திய SHINE பகுதி VIII நிறைவு விழா மற்றும் SHINE பகுதி IX தொடக்க விழா வி.ஐ.டி.யில் மார்ச் 20, 2023 அன்று நடைபெற்றது. திரு. ஜே. லட்சுமணன், செயலாளர், அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை அவர்கள் தலைமையேற்று விழாவைத் தொடங்கிவைத்தார். திரு. எஸ். சாத்தப்பன், பொது மேலாளர், CSR ஆஸ்பயர் சிஸ்டம்ஸ் மற்றும் திரு. ப. சுந்தர் ராஜ், திட்ட ஒருங்கிணைப்பாளர், அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். சிறப்பு விருந்தினராகத் திரு. டி. சுப்புரத்தினம், இயக்குநர், SHINE பயிற்சி மற்றும் மேலாளர், Talent Nurturing, ஆஸ்பயர் சிஸ்டம்ஸ் அவர்கள் சிறப்புரை வழங்கினார். இதில் SHINE பயிற்சி பெற்ற மற்றும் பயிற்சி பெறப் போகும் மாணவர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.













தினத்தந்தி வேலூர் 20-3-2023 5

வேலூர் வி.ஐ.டி.யில்

பி.எஸ்சி., பி.சி.ஏ. பட்டதாரிகளுக்கு உதவித்தொகையுடன் தகவல் தொழில்நுட்ப பயிற்சி

அனைவருக்கும் உயர்கல்வி அறக்கட்டளை தலைவர் கோ.விசுவநாதன் தகவல்

## கல்வி உதவித்தொகை பெற்ற மாணவர்களின் குரல்

**கு.அன்பழகன்**



என்னுடைய தந்தை இறந்துவிட்டார். என் அம்மா விவசாய வேலை செய்கிறார். நான் வேலூர் மாவட்டம் பீஞ்சமந்தை மலைப் பகுதியில் வசிக்கிறேன். சவ்வாது மலைவாழ் மக்கள் மேல்நிலைப் பள்ளியில் 12 ஆம் வகுப்பில் 1091 மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றேன். நான் திருவள்ளூர் மாவட்டம், தொன் போஸ்கோ விவசாயக் கல்லூரியில் பி.எஸ்.சி விவசாயம் படித்தேன். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை பொருளாதார வசதியில்லாத மாணவர்களுக்கு உயர்கல்விப் பயில உதவித்தொகை வழங்கி வருவதை அறிந்து அறக்கட்டளையின் உயர்கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பித்தேன். என்னுடைய குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையை விசாரித்து எனக்கு உயர்கல்விப் பயில உதவித்தொகை வழங்கினார்கள். இப்பொழுது படிப்பு முடித்து சவ்வாது மலைப் பகுதியில் உள்ள கோவிலாண்டூரில் தபால் நிலையத்தில் Main Carrier ஆகப் பணிபுரிகிறேன். நான் படித்து நல்ல வேலையில் இருப்பதற்கு உதவி செய்த அறக்கட்டளைக்கு என் சார்பிலும் என் பெற்றோரின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என் போன்று பல மாணவர்களுக்கும் உதவித்தொகை வழங்கி ஊக்கமளித்துக் கொண்டிருக்கும் அறக்கட்டளைக்கு மனமார்ந்த நன்றி.

**அ.தமிழரசி**




நான் இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா தாலுக்காவில் உள்ள லாலாப்பேட்டை என்னும் பகுதியில் வசிக்கிறேன். என்னுடைய அப்பா சிறுவயதிலேயே இறந்துவிட்டார். என்னுடைய அம்மா அங்கன்வாடியில் ஆசிரியராகப் பணிபுரிந்து என்னைப் படிக்க வைத்தார். நான் ஸ்ரீ இராமகிருஷ்ணா BHEL மேல்நிலைப் பள்ளியில் 12 ஆம் வகுப்பு படித்து 978 மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றேன். நான் 12 ஆம் வகுப்பு படிக்கும் பொழுது மாணவர்களுக்கு அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை அலுவலர்கள் வருகைதந்து 12 ஆம் வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்கு உயர்கல்வி பற்றிய விழிப்புணர்வு அளித்தனர். அறக்கட்டளையில் பொருளாதார வசதியில்லாத மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கி வருவதாகக் குறிப்பிட்டனர். நான் சென்னை பில்ராத் செவிலியர் கல்லூரியில் பி.எஸ்.சி. செவிலியர் படிப்பில் சேர்ந்தேன். அறக்கட்டளையில் உயர்கல்வி பயில உதவித்தொகைக்கு விண்ணப்பித்தேன். அறக்கட்டளையில் நேர்முகத்தேர்விற்கு அழைத்துக் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையைக் கேட்டறிந்து, எனக்கு உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கினார்கள். இப்பொழுது வேலூர் சி.எம்.சி.யில் staff Nurse ஆக பணிபுரிகிறேன். என் உயர்கல்விக்கும் என் போன்று பல மாணவர்களுக்கும் உதவித்தொகை வழங்கி ஊக்கமளித்துக் கொண்டிருக்கும் அறக்கட்டளைக்கு மனமார்ந்த நன்றி.


**கு.லாவண்யா**





நான் வேலூர் மாவட்டம் பெரிய அல்லாபுரம் என்ற பகுதியில் வசிக்கிறேன். என்னுடைய அப்பா ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்கிறார். செயின்ட் மேரி மேல்நிலைப் பள்ளியில் 12 ஆம் வகுப்பு படித்து 911 மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றேன். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை பொருளாதார வசதியில்லாத மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கி வருவதாக என் உறவினர் மூலம் தெரிந்துகொண்டு, அறக்கட்டளையில் உயர்கல்வி பயில உதவித்தொகைக்கு விண்ணப்பித்தேன். நான் சென்னை சி.எஸ்.ஐ. கல்யாணி செவிலியர் கல்லூரியில் பி.எஸ்.சி. செவிலியர் படிப்பில் சேர்ந்தேன். அறக்கட்டளையில் நேர்முகத்தேர்விற்கு அழைத்துக் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையைக் கேட்டறிந்து, எனக்கு உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கினார்கள். இப்பொழுது சென்னை காவேரி மருத்துவமனையில் Staff Nurse ஆகப் பணிபுரிகிறேன். உதவித்தொகை வழங்கி ஊக்கமளித்துக் கொண்டிருக்கும் அறக்கட்டளைக்கு என் போன்ற மாணவர்களின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## கல்வி உதவித்தொகை பெற்றவர் – 7,449




### அறக்கட்டளை உறுப்பினர்கள்



இந்த மகத்தான சேவையில் தாங்களும் பங்கு பெற்றுத் தங்கள் வீட்டில் நடக்கும் பிறந்தநாள், திருமணநாள் மற்ற இனிய நிகழ்வுகளின் மகிழ்ச்சியோடு அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கி ஏழை மாணவர்களின் உயர்கல்விக்கு உதவலாம். இதன் மூலம் அவர்களின் வாழ்வில் ஆக்கப்பூர்வமான மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

**தாங்கள் வழங்கும் நன்கொடைக்கு வருமானவரிச் சட்டம் 80G பிரிவின் கீழ் வரிவிலக்கு உண்டு.**

### முகவரி

திட்ட ஒருங்கிணைப்பாளர்
அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை,
அறை எண்: 215, டாக்டர். எம்ஜிஆர். பிளாக்,
விஐடி வளாகம், வேலூர் - 632 014.
தமிழ்நாடு, இந்தியா.
தொலைபேசி : 0416 - 220 2196, 8428408872

### வங்கி விவரம்

**Universal Higher Education Trust (UHET),**
A/C. No : 6063960011,
Indian Bank, VIT Branch,
Katpadi, Vellore - 632 014.
IFSC Code : IDIB000V086

**இசைபட வாழ்தல் ஈதலே என்பதை உணர்வோம்!**
**மகிழ்வித்து மகிழ்ந்திருப்போம்!**